


தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழக துணைச் செயலாளர் ஏஞ்சலா சின்னதுரை இல்ல திருமண விழாவில் கலந்து கொண்டு மணமக்களை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் பி.கீதாஜீவன் வாழ்த்தினார். உடன் கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினர் கா.கருணாநிதி, தூத்துக்குடி மாநகரச் செயலாளர் ஆனந்தசேகரன், கோவில்பட்டி நகரச் செயலாளர் சுரேஷ், ஒன்றியச் செயலாளர் முருகேசன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தி.மு.கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யா, முன்னாள் அமைச்சர் பி.கீதாஜீவன் ஆகியோர் வாக்குச் சேகரித்தனர். இதில் மூலனூர் கிழக்கு ஒன்றியம், குமாரபாளையம் ஊராட்சி, செயலாளர்கள் சுரேஷ் கன்னிவாடி, செண்பகம் பாலு முத்தூர் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.





மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தி.மு.கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யா மூலனூர் கிழக்கு ஒன்றியம், குமாரபாளையம் ஊராட்சி, கோட்டை மருதூர் ஊராட்சி, கன்னிவாடி பேரூராட்சி உள்ளிட்ட பகுதிகளில் மாவட்டக் கழகச் செயலாளர்கள், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் (திருப்பூர் கிழக்கு), கோ.தளபதி (மதுரை மாநகர்), மு.மணிமாறன் எம்.எல்.ஏ., மதுரை தெற்கு ஆகியோர் முன்னிலையில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குச் சேகரித்தார். இதில் ஒன்றிய கழக செயலாளர் ப.பழனிசாமி, பேரூர்க் கழகச் செயலாளர்கள் சுரேஷ் கன்னிவாடி, செண்பகம் பாலு முத்தூர் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 148 வது பிறந்த நாளை முன்னிட்டு பாவூர்சத்திரத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த தந்தை பெரியார் அவர்களின் திருஉருவப்படத்திற்கு தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் முன்னிலையில் மாலை அணிவித்து மலர் தூவி புகழஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து சமூக நீதி நாள் உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது. உடன் கீழப்பாவூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் சீனித்துரை உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா பிறந்தநாளை முன்னிட்டு சிவகங்கை மாவட்டம், சாக்கோட்டை மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் 17.09.2026 அன்று ஒன்றிய அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர் திருவுருவப் படங்களுக்கு ஒன்றியச் செயலாளர் டாக்டர் கே.எஸ்.ஆனந்த் மாலைகள் அணிவித்தார். கோட்டையூர் பேரூர்க் கழகச் செயலாளர் வி.சி.டி. இராசு முன்னிலை வகித்தார். சாக்கோட்டை மேற்கு ஒன்றிய தி.மு.க. இலக்கிய அணிச் செயலாளர் கே.வி.இராமகிருட்டிணன் வரவேற்புரை ஆற்றினார். நிகழ்வில் ஒன்றியக் கழகப் பொருளாளர் பாண்டி, மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் ஈஸ்வரன், மாவட்ட ஆதிதிராவிட அணி அமைப்பாளர் இராதா, சாக்கோட்டை மேற்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் க.காளீஸ்வரன், பேரூர்க் கழக மேனாள் செயலாளர் ஏ.எல்.எஸ்.இராமசாமி, மாவட்டப் பிரதிநிதி பாபு, வட்டச் செயலாளர் ஆறுமுகம், ஏஞ்சல் பேக் அந்தோணி, மூர்த்தி, சுப்பிரமணியன், உதயநகர் திராவிடர் விடுதலைக் கழகப் பொறுப்பாளர் ஏ.இளங்கோவன் மற்றும் கழகத் தோழர்கள் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

## கடந்த 24 மணிநேரத்தில் மட்டும் தமிழ்நாட்டில் 8 கொலைகள் நடந்துள்ளது!

# தமிழ்நாட்டில் காவல்துறை செயல்படுகிறதா? இல்லை முதல்வரைப் போல் ஓய்வில்தான் இருக்கிறதா?

## கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்வி!

சென்னை, செப்.21-

கடந்த 24 மணிநேரத்தில் மட்டும் தமிழ்நாட்டில் 8 கொலைகள் நடந்துள்ளதாகச் செய்திகள் வெளிவந்திருக்கின்றன. தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு முற்றிலும் செயலிழந்து போயுள்ளது என்பதற்கு இந்தக் கொலைகள்தான் சாட்சி.



ஒவ்வொரு நாளும் தமிழ்நாட்டில் கொலைகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போகிறது. தமிழ்நாட்டின் Growth Rate-ஐ உயர்த்துவார்கள் என நம்பி வாக்களித்த மக்களுக்கு, தினமும் Crime Rate-ஐ உயர்த்தி தண்டனை கொடுத்துக் கொண்டிருக்கிறது த.வெ.க. அரசு.

தமிழ்நாட்டில் மக்களின் பாதுகாப்பு அன்றாடம் கேள்விக்குறியாகிக் கொண்டிருக்கும்போது, என்ன செய்துகொண்டிருக்கிறது தமிழ்நாடு அரசு? தமிழ்நாட்டில் காவல்துறை செயல்படுகிறதா? இல்லை அதுவும் முதலமைச்சரைப் போல் ஓய்வில்தான் இருக்கிறதா?

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. தெரிவித்துள்ளார்.

---

### திருவள்ளூர் மத்திய மாவட்டம் - மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில்

# கழக நிர்வாக மறுசீரமைப்பு கலந்தாய்வு ஆலோசனைக் கூட்டம்!

திருவள்ளூர், செப். 21 –

திருவள்ளூர் மத்திய மாவட்டம், திருவள்ளூர் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கழக நிர்வாக மறுசீரமைப்பு தொடர்பான கலந்தாய்வு ஆலோசனைக் கூட்டம், ஒன்றியக் கழகச் செயலாளர் ஆர்.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு. நாசர் கலந்து கொண்டு, கழக மறுசீரமைப்புப் பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கி மறுசீரமைப்புப் பணிகளுக்கான படிவங்களை வழங்கினார்.

இதில் முன்னாள் எம்.எல்.ஏ. ஆ.கிருஷ்ணசாமி, நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், சி.ஜெரால்டு, எஸ்.ஜெயபாலன், காயத்ரி ஸ்ரீதரன், பா.நரேஷ் குமார், த.எத்திராஜ், ஜி.விமல் வர்ஷன், எஸ்.சங்கர்,

கழக இளைஞர் அணி நடுக்குத்தகை கே.சுரேஷ்குமார், வழக்கறிஞர் எஸ்.மூர்த்தி, பெ.வினோத், வே.தியாகராஜன், எஸ்.சௌந்தரராஜன், கே.கே. சொக்கலிங்கம், தரணி, சாமுண்டீஸ்வரி சண்முகம், சண்முகம், டி.டி.தயாளன், பரமேஸ்வரன், த.சுகுமார், கௌரி கஜேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள், முன்னணியினர் பலர் கலந்துகொண்டனர்.



விருதுநகர் மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பு தமிழ்நாடு மின் கழக தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் சார்பில் மாவட்டச் செயலாளர் அண்ணாதுரை தலைமையில் போக்குவரத்து கழக தொ.மு.ச. பொதுச் செயலாளர் ராஜ செல்வம், மாவட்டக் கவுன்சில் மாடசாமி முன்னிலையில் தமிழ்நாடு அரசு மின்வாரியத்தில் ஒப்பந்த தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்திட வேண்டும், கேங்மேன் பணியாளர்களை கள உதவியாளர்களாக மாற்றிட வேண்டும், தேர்வு செய்யப்பட்ட கேங்க் மேன் பணியாளர்களுக்கு பணி நியமன ஆணையை உடனடியாக வழங்கிட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஏராளமானோர் கலந்து கொண்டு தமிழக அரசுக்கு எதிராக கண்டன முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.




புதூரில் பயாரின் டிகால்ப் நிறுவனம் நடத்தும் மாபெரும் மாட்டு வண்டி எல்கை பந்தயத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி.மார்கண்டேயன் துவக்கி வைத்தார். நிகழ்வில் புதூர் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் செல்வராஜ், விளாத்திகுளம் மத்திய ஒன்றியச் செயலாளர் ராமசுப்பு, விளாத்திகுளம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் இம்மானுவேல் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.